ශ්‍රී ලංකා බාලදක්ෂ සංගමය
இலங்கை சாரணர் சங்கம்
Sri Lanka Scout Association
Incorporated by Parliamentary Act No. 13 of 1957
Member of the World Organization of Scout Movement

2026.05.28 *சுற்றுநிருப இல 44/ 2026*

சகல மாவட்ட ஆணையாளர்களுக்கும்,

ஐயா /அம்மணி

**தேசிய சாரணர் பொஷன் வலயம் -2026**

மிஹிது மகா ரஹத்தன் வகன்சே அவர்கள் இலங்கை வருகையை குறிக்கும் பொஷன் பண்டிகையை இலங்கை சாரணர் சங்கம் தேசிய சாரணர் பொஷன் வலயமொன்றை ஏற்பாடு செய்துள்ளது. இதனை தேசிய மட்டத்தில் கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த தேசிய சாரணர் பொஷன் வலயம் 2026 ஜுன் மாதம் 28ம் 29ம் திகதிகளில் மாலை 6.00 மணிமுதல் அதிகாலை 1.00 மணிவரை கொழும்பு 02, சார் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் லேக்ஹவுஸ் சுற்றுவட்டத்திலிருந்து பொலிஸ் தலைமையக சுற்றுவட்டம் வரையிலான வீதியின் இருபுறங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சாரணர் சங்கத்தால் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்படும் இந்த தேசிய பொஷன் வலயம் பொஷன் வெளிச்சக் கூடு மற்றும் வடிவமைப்பு கண்காட்சி, பக்தி பாடல்கள்,பொஷன் பந்தல்கள், தானசாலைகள், மின்விளக்கு அலங்காரங்கள் போன்ற சகல அம்சங்களையும் உள்ளடக்கிய வகையில் தயார் செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்தாலும் ஏற்பாடு செய்யப்படும் பொஷன் திட்டங்களுக்கு மேலதிகமாக, நீங்கள் அனைவரும் இந்த தேசிய பொஷன் வலயத்திற்கு பங்கேற்கலாம்.

❖ **பொஷன் வெளிச்சக்கூடு வடிவமைப்பு மற்றும் கண்காட்சி**

சாரணர் அடையாளத்தை, பௌத்த பக்தியையும், வெளிப்படுத்தும் முகமாக இந்த இரண்டு நாட்களில் சாரணர் மாவட்டம், மாவட்ட மட்டத்தில் பொஷன் வெளிச்ச கூடுகளை தயாரித்து, காட்சிப் படுத்துமாறு உங்களை அழைக்கின்றோம்.

இதில் பங்கேற்க விரும்பும் மாவட்டங்கள், 2026 ஜுன் மாதம் 05ம் திகதிக்கு முன்னர் பொஷன் வலயத்திறகுப் பொறுப்பான செயலகத்தின் உதவி முகாமையாளர் திருமதி புஷ்பிகா இலேபெரும அவர்களை 0112 433512 எனும் தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளவும்.

வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கு பின்வருமாறு பணப் பரிசுகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

- 01 ம் இடம் -ரூபா 100.000/=
- 02 ம் இடம் - ரூபா 75,000/-
- 03 ம் இடம் -ரூபா 50,000/-
- 04 ம் இடம் இடத்திலிருந்து 10 ம் இடம் வரை - ரூபா 25,000/- வீதம்
- பங்கேற்கும் சகலருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.


ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත කොළඹ 02. ශ්‍රී ලංකා
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு 02.
Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo 02, Sri Lanka
Tel : + 94 112 433131 /+94 112 433512
FAX : + 94 112 433131
E -mail : slsaheadq@gmail.com
web : www.scout.lk

❖ **பொஷன் பக்தி பாடல்கள்**

பொஷன் பக்தி பாடல்கள் மற்றும் அது தொடர்பான விளக்கங்கள் பின்னர் வழங்கப்படும்.
இதில் பங்கேற்கும் அனைவருக்கும் மதிப்புமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

இதில் பங்கேற்க விரும்பும் மாவட்டங்கள், 2026 ஜுன் மாதம் 05ம் திகதிக்கு முன்னர் பொஷன் வலயத்திறகுப் பொறுப்பான செயலகத்தின் உதவி முகாமையாளர் திருமதி புஷ்பிகா இலேபெரும அவர்களை 0112 433512 எனும் தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளவும்.

மேலும் தங்களிடம் வேறு ஏதேனும் வடிவமைப்புகள் அல்லது கருத்துக்கள் இருந்தால் இலங்கை சாரணர் சங்கத்தின் செயலகத்திற்கு சமர்ப்பிக்கவும்.

இச்செயற்பாட்டுக்கு உங்கள் மாவட்டத்திலிருந்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமித்து, அது குறித்து எங்களுக்கு தெரிவிக்கவும். (தற்போது உங்கள் மாவட்டத்தில் ஊடகம் மற்றும் கலாச்சாரப் பிரிவுக்கான உதவி மாவட்ட ஆணையாளர் இருந்தால், அவரை அப்பொறுப்ர்க்கு நியமித்து அதன் விபரங்களை எமக்கு வழங்கவும்.

நன்றி,
இங்ஙனம்
சாரணர் பணியில்

பிரபாத் குலரத்ன
உதவி பிரதம ஆணையாளர்
ஊடகம்,பொதுஜன தொடர்பு,கலாச்சாரம்

சட்டத்தரணி மனோஜ் நாணயக்கார
பிரதம ஆணையாளர்

பிரதி இலங்கை சாரணர் சங்க தலைமையக ஆணையாளர்கள்,
தலைவர், தவிசாளர், செயலாளர், பொருளாளர், - இலங்கை சாரணர் சங்கம்
அலுவலக கோவை